


இராணிப்பேட்டை நகர தி.மு.க., நகர இளைஞர் அணி சார்பில் நடந்த தெருமுனைப் பிரச்சாரக் கூட்டத்தில் நடிகர் வாசு விக்ரம் பேசினார். உடன் மாநில சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஆர்.விநோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரப்பன், நகராட்சி தலைவர் சுஜாதா வினோத், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.விநோத், நகர இளைஞர் அணி அமைப்பாளர் அஜ்மல், மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் இசட்.அப்துல்லா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### 2030 ஆம் ஆண்டுக்குள் பொருளாதாரம் 1 டிரில்லியன் டாலராக உயர இலக்கு!

# தமிழ்நாட்டில் ‘திராவிட மாடல்’ அரசு அசுர வேகத்தில் பயணித்து வருகிறது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூன் 22-

தமிழ்நாடு தொழில் மயமாக்கலில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக இருந்து வருகிறது. 2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 டிரில்லியன் டாலராக உயர வேண்டுமென்ற இலக்குடன் ‘திராவிட மாடல்’ அரசு அசுர வேகத்தில் பயணித்து வருகிறது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாடு தொழில் மயமாக்கலில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக இருந்து வருகிறது. திராவிட மாடல் ஆட்சியில் தொழிற் துறை மாபெரும் வளர்ச்சியை எட்டி உள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் ஏற்றுமதி மதிப்பு அதிகரிப்பு உயர்ந்துள்ளது.

இந்தியாவின் உற்பத்தித் துறை சார்ந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 11.90 விழுக்காடாக இருந்து வருகிறது. மோட்டார் வாகன உற்பத்தி, ஆயத்த ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் முதலிடத்தையும், ஜவுளி, இயந்திரங்கள் மற்றும் மின்னணு பொருட்கள் உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது. இந்தியாவில் 14 லட்சத்து 90 ஆயிரம் பதிவு செய்யப்பட்ட பெண் தொழிலாளர்களில், தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் மட்டும் 6 லட்சத்து 30 ஆயிரம் பேர் பணியாற்றி வருகின்றனர். அதாவது இந்திய அளவில் 42 சதவீத பெண்கள், தமிழ்நாட்டில் பணியாற்றுகின்றனர்.


தினகரன்
ஜூன் 21, 2025 சனிக்கிழமை
தொழில் புரட்சி

தமிழ்நாட்டில் தொழில் முனைவோரில் பெண்களின் பங்கு 30 விழுக்காடு. பெண் கல்வி ஊக்குவிப்பு திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்கள், மகளிர் விடியல் பேருந்து போன்ற பெண்கள் நலன் சார்ந்த திட்டங்கள் அதிக அளவில் தமிழ்நாட்டில் செயல்படுத்துவதன் பயனால் இவை சாத்தியமாகி உள்ளது.

திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு ஏற்றுமதியில் முதல் 4 மாநிலங்களில், தொடர்ந்து ஏற்றுமதி மதிப்பு அதிகரித்து வரும் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே. பல்வேறு சுய வேலைவாய்ப்பு திட்டங்களின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் ரூ.5200 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

வேளாண் தொழிலுக்கு அடுத்தபடியாக அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கி வரும் சிறு, குறு நடுத்தர நிறுவனங்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில் ரூ.1,381 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. கடன் உத்தரவாத திட்டம் மூலம் ரூ.7,578 கோடிக்கு மேல் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த அதி முக ஆட்சியில் 10 ஆண்டுகளில், ரூ.3,617 கோடி மட்டுமே சிறு, குறுந்தொழில்களுக்கு நிதி ஒதுக்கப்பட்ட நிலையில், திராவிட மாடல் ஆட்சியில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.6,626 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் இந்த நிதியாண்டில் மட்டும் ரூ.1,918 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 14 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளதோடு தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 46 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஒன்றிய அரசு உள்பட நாட்டின் பெரும்பாலான மாநிலங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு, பெருமளவில் சேவைத் துறையைச் சார்ந்திருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் சேவைத்துறை முக்கியமானதாக இருந்தாலும், தொழிற் துறையின் பங்களிப்பு மற்ற மாநிலங்களைவிட அதிக அளவில் உள்ளது. அரசின் தொழில் கொள்கைகள், முன்னெடுப்புகள், திட்டங்கள், செயல்பாடுகள், மானியங்கள், அடிப்படை கட்டமைப்பு ஆகியவை தொழிற் துறையில் முதலீடு செய்ய வரும் பன் னாட்டு முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக தமிழ்நாடு இருந்து வருகிறது.

தமிழ்நாடு எப்போதும் உலக அளவில் நடை பெறும் மாற்றங்கள், டிரெண்டுக்கு ஏற்றவாறு தன்னை அமைத்து கொள்வதில் தீவிர கவனம் செலுத்தும். அந்த அடிப்படையில்தான் தொழிற் துறையில் புதிய புரட்சியை உருவாக்குவதற்காக உலக தரத்திலான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி வருவதோடு, உலகளவில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப முதலீடுகளையும் ஈர்த்து வருகிறது. 2030ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 டிரில்லியன் டாலராக உயர வேண்டும் என்னும் இலக்குடன் திராவிட மாடல் அரசு, அசுர வேகத்தில் பயணித்து வருகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு சென்னை தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–பகுதிகளில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / பகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 27.06.2025 | சைதாப்பேட்டை கிழக்குப் பகுதி | விஜிபி சாலை, சைதாப்பேட்டை. | கோ.வி.லெனின்<br>அ.தா.டெக்சின் ரெமோரியோ |
| 2 | 29.06.2025 | மதுரவாயல் வடக்குப் பகுதி | பேருந்து நிலையம்,<br>முகப்பேர் கிழக்கு. | சென்னை அரங்கநாதன்<br>எஸ்.மாறன் |
| 3 | 30.06.2025 | சைதாப்பேட்டை மேற்குப் பகுதி | பேருந்து நிலையம்,<br>சாரதி நகர். | நெல்லிக்குப்பம் புகழேந்தி<br>செ.ஜோதி |
| 4 | | சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி | நீலாங்கரை | சைதை சாதிக்<br>சாய் ரித்திக் சக்திவேல் |
| 5 | 02.07.2025 | கலைஞர் நகர் வடக்கு பகுதி | பொன்னியம்மன் கோவில் தெரு,<br>சாலிகிராமம். | சேலம் சுஜாதா<br>சை.இம்ரான் |
| 6 | 04.07.2025 | புனித தோமையார் தெற்கு ஒன்றியம் | பெரும்பாக்கம் | சூர்யா கிருஷ்ணமூர்த்தி<br>அ.தா.டெக்சின் ரெமோரியோ |
| 7 | 05.07.2025 | வேளச்சேரி கிழக்குப் பகுதி | பெரியார் நகர் | பொள்ளாச்சி சித்திக்<br>மு.மு.முஸ்தாக் |
| 8 | 06.07.2025 | சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி | பெருங்குடி | இந்திரகுமார் தேரடி<br>சந்தோஷ் ஜெய் |
| 9 | | வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம் | ஓடமா நகர், வானகரம். | ஈகை தனசேகர்<br>க.ஹேமநாதன் |
| 10 | 07.07.2025 | கலைஞர் நகர் தெற்குப் பகுதி | சிவலிங்கபுரம் | தமிழ் க.அமுதரசன்<br>க.சுபத்ரா |
| 11 | 08.07.2025 | சோழிங்கநல்லூர் மத்திய பகுதி | பள்ளிக்கரணை,<br>நாராயணபுரம். | சைதை சாதிக்<br>அ.தஸ்னீம் பானு |
| 12 | 09.07.2025 | புனிதத் தோமையார் தெற்கு ஒன்றியம் | சாரதி நகர் பேருந்து நிலையம்,<br>சுபம் ஸ்கொயர், காரம்பாக்கம். | வழக்கறிஞர் அருள்மொழி<br>அ.தஸ்னீம் பானு |
| 13 | 12.07.2025 | மதுரவாயல் தெற்குப் பகுதி | அன்னை சத்யா நகர், பூத்தபேடு,<br>மதுரவாயல். | வழக்கறிஞர் தாயகம் கவி எம்.எல்.ஏ.<br>தி.கோகுல் |
| 14 | 14.07.2025 | வேளச்சேரி மேற்குப் பகுதி | லதா சூப்பர் மார்க்கெட் அருகில்,<br>தண்டீஸ்வரம். | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி<br>நரேன் கௌதம் |

**சென்னை**

நாள் : 20.06.2025

கலைஞர் 100 1924 - 2023






முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பத்தூர் நகர இளைஞரணி சார்பில் பேருந்து நிலையத்தில் தெருமுனைக் கூட்டம் நடைப்பெற்றது. கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோரின் வழிகாட்டலில் நகரக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் சு.இராசேந்திரன் தலைமையில், டி..எஸ். மாதேஸ்வரன் வரவேற்பில் கந்திலி கரிகாலனும், ஜா.முஹம்மத் ஜபீரும் வி.வடிவேலும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் ஏ.சம்பத் குமார், டி.ரகுநாத், சு.அரசு, வி.மகாலிங்கம், ஏ.ஆர். சபியுல்லா, மே.சார்லஸ் நவீன் குமார், வ.கிரிராஜ், டி.எஸ். தமிழ்மணி, க.நதிம் அஹமத், இ.ஐயப்பன், ஏ.ரமணன் மற்றும் மாவட்ட நகர வார்டு களாக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உறுப்பினர்கள், இளைஞரணி தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் கிழக்கு மாவட்டம், கம்மாபுரம் வடக்கு ஒன்றியக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம், ஒன்றியக் கழகச் செயலாளர் பா.திருமாவளவன் தலைமையில் நடைபெற்றது. தலைமைச் செயற்குழு உறுப்பினரும், தொகுதி பார்வையாளருமான வே.விக்ரமன், ஓர் அணியில் தமிழ்நாடு, உறுப்பினர் சேர்த்தல் படிவத்தினை கழக நிர்வாகிகளிடம் வழங்கினார். இதில் ஒன்றிய துணைச் செயலாளர்கள் என்.ஜி.கணேசன், கலா கண்ணன், பி.தமிழ்செல்வன், பொருளாளர் கா.கதிர்வேல், மாவட்டப் பிரதிநிதிகள் என்.சி.வி.மோகன், அரங்கநாதன், இளைஞர் அணி சிவா, தொழிலாளர் அணி தெய்வ ஆசை தம்பி, விளையாட்டு மேம்பாட்டு அணி என்.சரவணகுமார், மாணவர் அணி கே.பி.ஸ்ரீகாந்த், ஆதிதிராவிடர் நலக் குழு கே.ராஜா, விளையாட்டு மேம்பாட்டு அணி வெங்கடேசன், விவசாய அணி விஜயராகவன், பொறியாளர் அணி அரவிந்தன், ஒன்றியக் கவுன்சிலர் தமிழ்மணி, தகவல் தொழில் நுட்ப அணி முரளிகிருஷ்ணன், கிளைச் செயலாளர் சிவப்பிரகாசம், பன்னீர்செல்வம், நேரு, அன்பழகன் உள்ளிட்ட ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### விருதுநகர் வடக்கு மாவட்டம் சிவகாசி மாநகரம்

# சிவகாசி மாநகரம், மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் - தேர்தல் முடிவு!

"விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், மாவட்டப் பிரதிநிதி பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால், விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கு தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2025 ஜூன் 20 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்." என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி; விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கு அ.சண்முகம் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு, **விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், மாவட்ட பிரதிநிதியாக அ. சண்முகம்** 66-ஏ, சிவன் சன்னதி தெரு, சிவகாசி விருதுநகர் மாவட்டம். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18,
நாள் : 21.6.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### ‘கலைஞர் தொலைக்காட்சி’ வணிகப் பிரிவு நிர்வாகி

# ஸ்ரீராம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, ஜூன் 22–

கலைஞர் தொலைக்காட்சி வணிகப் பிரிவு நிர்வாகியாகப் பணிபுரிந்த ஸ்ரீராம் மறைவுச் செய்தி அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

கலைஞர் தொலைக்காட்சி வணிகப் பிரிவின் நிர்வாகியாகப் பணிபுரிந்த ஸ்ரீராம் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த துயருற்றேன்.

ஸ்ரீராம் அவர்களது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர், கலைஞர் தொலைக்காட்சி ஊழியர்கள், ஊடக நண்பர்கள் என அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. கோவிந்தசாமி
### ஜூன் 22 (2002)



கழகம் தொடங்கிய நாளிலிருந்தே கழகத்தின் உறுப்பினராகப் பணியாற்றியவர்.

1959, 1964, 1968 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் தேர்தலில், மயிலை பகுதியிலிருந்து கழகச் சார்பில் தொடர்ந்து போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, ஆறுமாதம் சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

அறிஞர் அண்ணா அவர்களால் ‘சாது’ கோவிந்தசாமி என்று செல்லமாக அழைக்கப்பட்டவர். தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் சுதந்திர பொன்விழா கேடயம் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**